**முதன்மை சார்பு நீதிமன்றம், ஈரோடு, ஈரோடு மாவட்டம்.**

அசல் வழக்கு எண்.291/2025 இ.ம.எண்.

எஸ்.சி.ஓ.பி.எண். நி.வே.ம.எண்.

2026-ம் ஆண்டு ஜனவரி மாதம் 28-ந் தேதி வாதி தரப்பு சாட்சியின் **வா.சா.2**-ன் வாக்குமூலம் 1989-ம் ஆண்டு 19-வது விதி ஏற்பாட்டின் படி திருமதி.K.P.இளவரசி, முதன்மை சார்பு நீதிபதி, ஈரோடு அவர்களால் உறுதி பிரமாணம் செய்யப்பட்டு விசாரணை செய்யப்பட்டார்.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | ஹேமலதா | வட்டம் | : | |
| த/பெ. | : | | மாவட்டம் | : | |
| க/பெ. | : | | தொழில் | : | |
| கிராமம் | : | | வயது | : | |

**வா.சா.2: முதல் விசாரணை**:-

நான் வாதி தரப்பு சாட்சி ஆவேன். நான் துய்யம்பூந்துறை அ கிராமத்தில் 2024-ம் ஆண்டிலிருந்து கிராம நிர்வாக அலுவலராக பணிபுரிந்து வருகிறேன். நீதிமன்றதிலிருந்து சாட்சியம் அளிக்க எனக்கு அழைப்பாணை வந்ததின் பேரில் சாட்சியம் அளிக்க வந்துள்ளேன். கருப்பண்ண கவுண்டரின் வாரிசுதாரர்கள் துய்யம்பூந்துறை அ கிராமத்தில் கருப்பண்ண கவுண்டர் கிரையம் பெற்ற சொத்தைப் பொறுத்து, வருவாய் துறை ஆவணங்கள் பெறுவதற்காக எங்கள் அலுவலகம் வந்தார்கள். அவ்வாறு எங்களை அணுகிய போது, கிரையப்பத்திரத்தை காண்பித்தார்கள், மேற்படி பத்திரத்தில் ரீ.ச.எண்.111/2 என குறிப்பிடப்பட்டிருந்தது, ஆனால் அவர்கள் அனுபவம் செய்த இடம் 112/3 ஆகும். மேற்படி சரியான ரீ.ச.எண்.112/3 என்பதை தெரிந்து கொள்ள நாங்கள்

தாவா இடத்திற்கு சென்றோம். சர்வேயரை அழைத்து சரிபார்த்து ரீ.ச.எண்.112/3 என உறுதி செய்துக்கொண்டோம். அதன்படி கிராம நிர்வாக அலுவலரான நான் சான்று வழங்கினேன். அந்த சான்று **சா.சா.ஆ.1** ஆகும்.